(2021) 1 எஸ்.சி.ஆர். 443

இந்திய ஒன்றிய அரசு

-எதிர்-

கே.ஏ. நஜீப்

(குற்றவியல் மேல்முறையீடு எண் 98/2021)

2021 பிப்ரவரி 1

(மாண்புமிகு நீதியரசர் திரு. என்.வி. ரமணா

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்ய காந்த்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. அனிருத்தா போஸ்)

பிணை :

பிணை வழங்குதல் - உயர் நீதிமன்றத்தால் - எதிரி இ.த.ச., 143, 147, 148, 120-பி, 341, 427, 323, 324, 326, 506(எச்), 201, 202, 153 ஏ, 212, 307 மற்றும் 149, வெடி பொருள்கள் சட்டம், 1908, பிரிவு 3 மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம், 1967, பிரிவு 16, 18, 18-பி, 19 மற்றும் 20-இன் கீழான குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டார் - குறுகிய காலத்திற்குள் விசாரணை நடக்க வாய்ப்பில்லாததால், விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டவரை நீண்டக் காலம் சிறைக் காப்பில் வைத்திருக்கக்கூடாது என்ற காரணத்திற்காக – சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் பிரிவு 43(டி)(5)-இன் கீழ் பிணை வழங்குவதற்கு தடை இருந்ததால் முதலில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்க மறுத்த சிறப்பு நீதிமன்றத்தின் ஆணையை நீக்கறவு செய்தமை - உச்ச

நீதிமன்றத்தில் மேல்முறையீடு - முடிவு ,அரசமைப்பு பகுதி III.இல் உத்தரவாதம் தரப்பட்ட சுதந்திரம் என்பத நடைமுறை மற்றும் நியாயத்தின் பால மட்டுமல்லாது நீதி மற்றம் விரைந்த விசாரணையும் அதன் காப்பு வரம்புக்குள் வரும் - விசாரணை நிலுவையில் உள்ளபோது, விசாரணைக் கைதிகள் காலவரம்பற்று வைத்திருக்கப்படக்கூடாது - விரைவான விசாரணைக்கு சாத்தியமில்லை என்றும், குற்றம் சாட்டப்பட்டவர் குறிப்பிட்டக் காலத்திற்கு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்றும் தெளிவாகத் தெரிந்தால், நீதிமன்றங்கள் வழக்கமாக அவர்களை ஜாமீனில் விடுவிக்க வேண்டியிருக்கும் - சட்டரீதியான கட்டுப்பாடுகள் தாமே, அரசியலமைப்பின் மூன்றாம் பகுதி மீறப்பட்டதன் அடிப்படையில் பிணை வழங்குவதற்கான அரசியலமைப்பு நீதிமன்றங்களின் தகுதியை நீக்காது - அத்தகைய சட்டப்பூர்வ தடைகள் மற்றும் அரசமைப்பு அதிகாரவரம்பின் கீழ் செயல்படுத்தும் அதிகாரம் ஆகியவை பொருந்தவேண்டும் - சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் பிரிவு 43 டி(5)இன் கீழ் உள்ள தடைகள், என்டிபிஎஸ் சட்டம் பிரிவு 37-இன் கீழ் கூறப்பட்டுள்ள தடைகளை விட குடுமை குறைவு - இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஐந்தாண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்துள்ளார், உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எவரக்கம் 8 ஆண்டுகளுக்கு மேல் கடுந் தண்டனை வழங்கப்படவில்லை மற்றும் 276 சாட்சிகள் விசாரிக்கப்படவேண்டியுள்ளது - இந்த வழக்கின் சங்கதிகளிலிருந்து, பிணை வழங்குவதைத் தவிர உயர் நீதிமன்றத்திற்கு வேறு வாய்ப்பில்லை - இருப்பினும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்கியபோது விசாரணை நீதிமன்றம் விதித்த நிபந்தனைகளுடன் கூட மேலும் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன – மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்படுகிறது.

ஷஹீன் வெல்ஃபேர் அசோசியேஷன் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா (1996)2 **எஸ்சிசி** 616 : [1996] 2 **எஸ்சிஆர்** 1123; ஹுசைன் v. யூனியன் ஆஃப் இந்தியா (2017) 5 **எஸ்சிசி** 702 : [2017] 2 **எஸ்சிஆர்** 626; பரம்ஜித்சிங் எதிர் மாநிலம் (டெல்லியின் என்சிடி) (1999) 9 **எஸ்சிசி** 252; பாபா என்கிற சங்கர் ரகுமான் ரோஹிதா எதிர் மகாராஷ்டிரா மாநிலம் (2005) 11 **எஸ்சிசி** 569; உமர்மியா அலியாஸ் மமுமியா எதிர் குஜராத் மாநிலம் (2017) 2 **எஸ்சிசி** 731, ஏன்ஜிலா ஹரிஷ் சன்டாகி -எதிர்- மகாராஷ்டிரா மாநில அரசு 2021 (2) **ஸ்கேல்** 301; சாகர் தத்யாராம் கோர்கே எதிர் மகாராஷ்டிரா மாநில அரசு 2021 (2) **ஸ்கேல்** 302; விசாரணைக் கைதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உச்ச நீதிமன்ற சட்ட உதவிக் குழு எதிர் யூனியன் ஆஃப் இந்தியா (1994) 6 **எஸ்சிசி** 731 : [1994] 4 **சப்ளி. எஸ்சிஆர்.** 386 – **சார்வுறப்பட்டது.**

தேசிய புலனாய்வு முகைமை எதிர் ஜஹூர் அஹ்மத் ஷா வதாலி (2019) 5 **எஸ்சிசி** 1 : [2019] 5 **எஸ்சிஆர்** 1060-**குறிப்பிடத்தக்கது.**

புரான் -எதிர்- ராம்பிலாஸ் (2001) 6 **எஸ்சிசி** 338 : [2001] 3 **எஸ்சிஆர்** 432; குர்சரண் சிங் எதிர் மாநிலம் (டெல்லி நிர்வாகம்.) (1978) 1 **எஸ்சிசி** 118 : [1978] 2 **எஸ்சிஆர்** 358; பீகார் மாநிலம் எதிர் ராஜ்பல்லவ் பிரசாத் (2017) 2 **எஸ்சிசி** 178 : [2016] 9 **எஸ்சிஆர்** 652 - **குறிப்பிடப்பட்டது.**

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

(2019)5 **எஸ்சிஆர்** 1060	**குறிப்பிடத்தக்கது**	**பத்தி** 7
(1996)2 **எஸ்சிஆர்** 1123	**சார்வுறப்பட்டது**	**பத்தி** 8
(2017) 2 **எஸ்சிஆர்** 626	**சார்வுறப்பட்டது**	**பத்தி** 8
(2001)3 **எஸ்சிஆர்** 432	**குறித்துக்காட்டப்பட்டது**	**பத்தி** 9

(1978)2 எஸ்சிஆர் 358	குறித்துக்காட்டப்பட்டது	பத்தி 9
(2016)9 எஸ்சிஆர் 652	குறித்துக்காட்டப்பட்டது	பத்தி 10
(1999)9 எஸ்சிசி 252	சார்வுறப்பட்டது	பத்தி 13
(2005)11 எஸ்சிசி 569	சார்வுறப்பட்டது	பத்தி 13
(2017) 2 எஸ்சிசி 731	சார்வுறப்பட்டது	பத்தி 13
2021(2) ஸ்கேல் 301	சார்வுறப்பட்டது	பத்தி 14
2021(2) ஸ்கேல் 302	சார்வுறப்பட்டது	பத்தி 14
(1994) 4 சப்ளி எஸ்சிஆர் 386	சார்வுறப்பட்டது	பத்தி 16

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண் 98/ 2021.

எர்ணா குளத்திலுள்ள, கேரளா உயர் நீதிமன்றத்தின் குற்றவியல் மேல்முறையீடு எண் 659/2019-இல் குற்றவியல் பல்வகை மனு 1/ 2019-இல் 23.7.2019 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றம் உத்தரவிலிருந்து எழுகிறது.

வழக்குரைஞர்கள்:

திருமதி ஐஸ்வர்யா பதி, கூடுதல் அரசு வழக்குரைஞர், R. பசந்த், மூத்த வழக்குரைஞர், கனு அகர்வால், முகமத் அகில், பி.வி.பலராம் தாஸ், ரமேஷ் பாபு எம்.ஆர். , தரப்பினர்களுக்காக.

நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு.சூர்ய சாந்த் அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. எர்ணாகுளத்திலுள்ள கேரளா உயர் நீதிமன்றத்தில், இந்திய தண்டனைச் சட்டம், 1860 (இ.த.ச.,) பிரிவுகள் 143, 147, 148, 120-பி, 341, 427, 323, 324, 326, 506(எச்), 201, 202,

153 ஏ, 212, 307 மற்றும் 149, வெடி பொருள்கள் சட்டம், 1908, பிரிவு 3 மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் (ச.வி.ந.த.), 1967, பிரிவுகள் 16, 18, 18-பி, 19 மற்றும் 20 ஆகியவற்றின் கீழான குற்றங்களுக்காக எதிர்மேல்முறையீட்டாளருக்கு பிணை வழங்கி 23.07.2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக தேசிய புலனாய்வு முகைமை (சுருக்கமாக "தே.பு.மு") மூலம் ஒன்றிய அரசால் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

சங்கதிகள்

3. அரசுத் தரப்பு வழக்கு யாதெனில், தொடுப்புழவிலுள்ள, நியூமென் கல்லூரியில் இளநிலை வணிகவியல் இரண்டாம் செம்ஸ்டர் வினாத்தாளை மலையாளத்தில் தயார் செய்யும்போது பேராசிரியர் டி.ஜே. ஜோசப், சமூகத்தில் சில பிரிவினரின் குறிப்பிட்ட மதத்திற்கெதிராக எதிப்பு எனக் கருதப்படும் வினாவினை சேர்த்துள்ளார். எதிர்மனுதாரர் பாபுலர் பிரன்ட் ஆப் இந்தியா (பிஎப்ஐ) உறுப்பினர்களுடன் சேர்ந்து இந்த தகுதிக்கேடான செயலை குறிப்பாக பழிதீர்க்கமுடிவு செய்துள்ளார். 04.07.2010 அன்ற காலை சுமார் 8 மணிக்கு பொதுவான நோக்குடன் ஒருகுழுவினர், பாதிக்கப்பட்ட பேராசிரியர் உள்ளூர் கிறித்தவ ஆலயத்தில் ஞாயிறு கூட்டத்தை முடித்துவிட்டு அவரது அம்மா மற்றும் சகோதரியுடன் திரும்பிக்கொண்டிருந்தபோது தாக்கினர். அந்த தாக்குதலின் போது, பி.எப்.ஐ. உறுப்பினர்கள் வலுக்கட்டாயமாகப் பாதிக்கப்பட்டவரின் காரை வழிமறித்து அவரைத் தடை செய்து வெட்டுவாள், கத்தி, சிறுவெட்டி ஆகியவற்றால் அவரது வலது உள்ளங்கையை வெட்டியுள்ளனர். பாதிப்படைந்தவரின் உதவிக்கு வருபவர்களை தடை செய்யவும், அவர்கள் மனதில் பீதியையும் அச்சத்தையும் உண்டு பண்ணுவதற்காக நாட்டு வெடி குண்டுகளையும்

வீசியுள்ளனர். பாதிக்கப்பட்ட பேராசிரியரின் மனைவி தாக்கியவர்களுக்கு எதிராக புகார் கொடுத்து இ.த.ச. பிரிவுகள் 143, 147, 148, 120-பி, 341, 427, 323, 324, 326, 506(எச்) 307 மற்றும் 149 மற்றும் வெடி பொருள்கள் சட்டம், 1908, பிரிவு 3 -இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது.

4. இந்த தாக்குதலானது உன்னிப்பான முன்கூட்டிய திட்டமிடல், பலமுறை தோற்ற முயற்சிகள் மற்றும் ஆபத்தான ஆயுதங்களை பயன்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்கும் பெரிய சதித்திட்டத்தின் ஒரு பகுதி என்பது புலன் விசாரணையின் போது தெரியவந்துளளது. அதன்படி எதிர்மேல்முறையீட்டாளர் உட்பட பல டஜன் நபர்கள் காவல்துறையால் குற்றஞ்சாட்டப்பட்டனர். எதிர்மேல்முறையீட்டாளர் முக்கியமான சதிகாரர்களில் ஒருவர் என்றும், இ.த.ச., பிரிவுகள் 153 ஏ, 201, 202 மற்றும் 212, ச.வி.ந.த. சட்டம், பிரிவுகள் 16, 18, 18-பி, 19 மற்றும் 20 ஆகியவற்றின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டதாக கூறப்படுகிறது. இருப்பினும், அவரை கண்டுபிடிக்க முடியாதலால், எதிர்மேல்முறையீட்டாளர் தலைமறைவானார் என அறிவிக்கப்பட்டு, அவரது விசாரணை மற்ற உடன் சதி செய்தவர்களுடன் விசாரணையிலிருந்து பிரிக்கப்பட்டது. உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டனர் மற்றும் 30.04.2015 நாளிட்ட உத்தரவின்படி தேசிய புலனாய்வு முகமை சிறப்பு நீதிமன்றத்தால் பெரும்பாலானோர் குற்றம் புரிந்தவர் எனக் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு இரண்டு முதல் எட்டு ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத்தணடனை மொத்தமாக வழங்கப்பட்டது.

5. எதிர்மேல்முறையீட்டாளரை 10.04.2015 அன்று தான் கைது செய்ய முடிந்தது மற்றும் அவருக்கெதிராக தேசிய புலனாய்வு முகைமையால் குற்றப்பத்திரிக்கை மீண்டும் தாக்கல் செய்யப்பட்டு, அதற்கிணங்க அவர் தற்போது

விசாரணைக்கு உட்பட்டுள்ளார். பிணையில் விடப்பட்ட அல்லது விடுதலை செய்யப்பட்ட பிற உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு இணையாக, குற்றத்தில் அவரது பங்கு சிறியது என்ற காரணத்தின்பேரில் தளர்வு கோரி, 2015 முதல் 2019-க்கு இடையே 6 முறை பிணை கோரி சிறப்பு நீதிமன்றத்தையும் மற்றும் உயர்நீதிமன்றத்தையும் அணுகினார். எதிர்ப்புக்குள்ளான உத்தரவை காக்கும் விதமாக, முதல் நோக்கிலேயே அவர் குற்றம் குறித்து முன்னர் அறிந்துள்ளார் என்றும், அவர் தாக்குதலுக்கு உதவி செய்தார் என்றும், வாகனம் மற்றும் சிம் கார்டு-க்கு ஏற்பாடு செய்தார் என்றும், சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே காத்திருந்தார் என்றும், குற்றம் செய்தவர்களுக்கு வாகன வசதி, தாங்கும் வசதி, பின்னர் மருத்துவ உதவி செய்தார் என்றும் கருத்துரைத்து, எதிர்மேல்முறையீட்டாளரின் பிணை மறுக்கப்பட்டது. எனவே, ச.வி.ந.ச. பிரிவு 43-டி (5)-ன்கீழ் பிணை வழங்குவதற்கு எதிரான தடை ஈர்க்கப்படுகிறது என்பது நீதிமன்றத்தின் கருத்தாகும்.

6. பிணை வழங்க மறுத்த சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவை வினா எழுப்பி, மூன்றாம் முறையாக, மே, 2019-இல் உயர்நீதிமன்றத்தை எதிர்மேல்முறையீட்டாளர் அணுகியுள்ளார். எதிர்மேல்முறையீட்டாளர் நான்கு ஆண்டுகளாக சிறைக்காப்பில் இருந்தபோதிலும் இதுவரை விசாரணை தொடங்கப்படாததை குறித்துக் காட்டிய உயர்நீதிமன்றம் தனது எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம் எதிர்மேல்முறையீட்டாளரை பிணையில் விடுவித்தது. தேசிய புலனாய்வு முகமை சட்டம், 2008-ன்கீழ் விரைவான விசாரணைக்கான வலியுறுத்தலுக்கு முக்கியத்துவம் அளித்து உயர்நீதிமன்றம் எதிர்காலத்தில் விசாரணை ஆரம்பிக்க வாய்ப்பில்லாத போது, அவ்வாறு செய்யாதது அவருக்கு கடுமையான குந்தகமும் மற்றும் பாதிப்பும் ஏற்படும் என்பதனால்

விசாரணைக் கைதி-எதிர்மேல்முறையீட்டாளர் நீண்ட காலம் சிறைக்காப்பில் வைத்திருக்கக்கூடாது என முடிவு செய்தது. இருப்பினும் மேற்சொன்ன பிணை ஆணையின் செயல்பாடு இந்நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, எதிர்மேல்முறையீட்டாளர் ஏறக்குறைய ஐந்தாண்டுகள் மற்றும் ஐந்து மாதங்கள் நீதிமன்றக்காவலில் இருந்துள்ளார்.

வாதுரைகள்

7. ச.வி.ந.த.ச., பிரிவு 43-டி (5)-இல் உள்ள சட்டபூர்வ கடுமையைக் கருதாது பிணை வழங்கி உயர்நீதிமன்றம் தவறிழைத்து விட்டது என மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் வாதிட்டார். **நேஷனல் இன்வெஸ்டிகேஷன் ஏஜென்சி -எதிர்- சாஹூர் அஹ்மத் ஷா வாட்டலி, (2019) 5 எஸ்சிசி 1** என்ற வழக்கின் தீர்ப்புரையைச் சார்ந்து, சிறப்புச் சட்டங்களின் கீழுள்ள பிணை நடவடிக்கைகள் தனித்துவமானது என்றும், சந்தேகத்திற்குரியவர் குற்றவாளி என்று முதல் நோக்கில் நம்பப்பட்டால், பிணையை மறுப்பது நீதிமன்றத்தின் கடமையாகும் என விளக்கிக் கூறப்பட்டது. சிறப்பு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் முன்பு முன்னிலையான பல்வேறு தருணங்களில் முதல் நோக்கில் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் குற்றவாளியாவார் என்று நம்புவதற்கு போதுமான காரணங்கள் உள்ளன என மேலும் வாதிடப்பட்டது. அவர் பல ஆண்டுகள் தலைமறைவாகியுள்ளதால் அவரை சுதந்திரமாக விடப்பட்டால் அவர் திரும்ப வரமாட்டார் என்ற நியாயமான பயமாக இருக்கிறது என்ற சங்கதி வலியுறுத்தப்பட்டது. விசாரணையை வரைந்து முடிப்பது தொடர்பாக, 276 சாட்சிகளை விசாரிக்கக் கோரியும், அதேநேரத்தில் விசாரணையை அன்றாட

அடிப்படையில் நடத்தவும், ஓராண்டிற்குள் அதை முடிக்கவும் தேசிய புலனாய்வு முகைமையானது ஒரு கூடுதல் உறுதியாவணத்தைத் தாக்கல் செய்தது.

8. மாறாக, உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும், சிலர் மட்டுமே குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டபோதிலும், அந்த குற்றவாளிக்கு எட்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை வழங்கப்படவில்லை என்றும் எதிர்மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் விளக்கிக் கூறினார். விசாரணை துவக்கப்படாமலேயே ஏறக்குறைய ஐந்தரை ஆண்டுகள் சிறைக் காப்பினை எதிர்மேல்முறையீட்டாளர் அனுபவித்துள்ளார் என்பது, ஒரு நீதி அதிகார அமைப்பினால் முடிவு செய்யப்படாமலேயே பெரும்பகுதியான தண்டனையை முடித்துள்ளது அவரது அரசியலமைப்பு சுதந்திரம் மற்றும் உரிமையை மீறியதாகிறது. உயர்நீதிமன்றம் ஒரு முறை பிணை வழங்கும் அதிகாரத்தை செயல்படுத்தியபோது, அரிதான சூழ்நிலைகளைத் தவிர, அதில் தலையிடப்படக்கூடாது என அவர் வலியுறுத்தினார். **ஷாஹீன் வெல்ஃபேர் அஸோஸியேஷன் -எதிர்- இந்திய ஒன்றியம்,** (1996) 2 **எஸ்சிசி** 616 மற்றும் **ஹுசைன் -எதிர்- இந்திய ஒன்றியம்,** (2017) 5 **எஸ்சிசி** 702 என்ற வழக்குகளைச் சார்ந்து, அத்தகைய நீடிக்கப்பட்ட சிறைவாசம் விரைந்து விசாரணையை முடிக்கும் எதிர்மேல்முறையீட்டாளரின் உரிமையை மீறுவதாகும், அவ்வாறான வழக்கில் சிறப்பு சட்டங்களின் கீழ் குறிப்பிடப்பட்ட கால வரம்பை பொருட்படுத்தாமல், பிணை வழங்குவதில் அரசியலமைப்பு நீதிமன்றங்கள் தங்களது அதிகாரத்தைச் செலுத்த வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

பகுப்பாய்வு

9. பிணை மனுவை பரிசீலிக்கும்போது, அதனை இரத்து செய்வதற்கான மனுவில் முடிவு செய்யும்போது பொருத்தப்படவேண்டிய வரையறைகளுக்கிடையே தெளிவான வேறுபாடுகள் உள்ளன என்று வலியுறுத்தப்படவேண்டியுள்ளது. பிணை விண்ணப்பத்தை தீர்மானிக்கும் சமயத்தில், சாட்சியத்தின் தகுதிப்பாடுகள் மதிப்பிடாதபோதிலும், காரணங்களை பதிவு செய்வது அவசியமாகிறது என்று **பூரன் -எதிர்- ராம்பிலாஸ்,** (2001) 6 **எஸ்சிசி** 338 என்ற வழக்கில் வலியுறுத்தப்பட்டது. **மேற்படி பூரன்** என்ற வழக்கில் குறிப்பிடப்பட்ட **குர்ச்சரண் சிங் -எதிர்- மாநிலம் (டெல்லி நிர்வாகம்),** (1978) 1 **எஸ்சிசி** 118 என்ற வழக்கில், புதிய சூழ்நிலைகள்/சாட்சியங்கள் இருந்தால் மட்டுமே விசாரணை நீதிமன்றத்தால் ஒரு முறை வழங்கப்பட்ட பிணை அதே நீதிமன்றத்தால் இரத்து செய்யப்படலாம், தவறினால் மேல்முறையீட்டு அதிகாரவரம்பை செயலுறுத்தஉயர்நீதிமன்றத்தை அணுகுவதே அவசியமாகிறது என கருத்துரைக்கப்பட்டது.

10. **பீகார் மாநில அரசு -எதிர்- ராஜ்பல்லவ் பிரசாத்,** (2017) 2 **எஸ்சிசி** 178 என்ற வழக்கில், விலக்கு பெற்ற சூழிநிலைகள் தவிர, பிணை விஷயங்களைப் பொறுத்தவரை மேலமை நீதிமன்றங்களால் செய்யப்படும் விருப்புரிமைக்கு கட்டாயம் மதிப்புத் தரவேண்டும். மேலே காட்டப்பட்ட முடிவில் கீழ்க்கண்டவாறு உள்ளது:

"14. கீழமை நீதிமன்றத்தால், பிணை வழங்குவதற்கு எதிராக வைக்கப்பட்டிருக்கும் வாதத்தை பரிசீலிக்கையில், அதுவும் உயர்நீதிமன்றம் போன்ற மேலமை நீதிமன்றங்கள் பரிசீலிக்கும்போது, எங்களைக் கட்டுப்படுத்தும் வரையறைகளை நாங்கள் அறிவோம் என வெளியிடையாக நாங்கள் கருத்துரைக்கிறோம்.

தொடர்புடைய பரிசீலனையின்பேரில், உயர்நீதிமன்றத்தால் விருப்புரிமை செயலுறுத்தப்பட்டு பிணை வழங்கப்பட்டால், தொடர்பற்ற பரிசீலனைகளின்பேரில் தன்விருப்புரிமை செயலுறுத்தப்பட்டது மற்றும்/அல்லது அத்தகைய தன்விருப்புரிமையை செயலுறுத்துகையில், கருத்திற்கொள்ளப்படவேண்டிய தொடர்புடைய அம்சங்கள் புறந்தள்ளப்பட்டு அல்லது மாற்று வழி பின்பற்றப்பட்டது என்று காணப்படாதவரை அத்தகைய தன்விருப்புரிமையில் இந்நீதிமன்றம் தலையிடாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிணை வழங்கிய விருப்புரிமையில் தலையிட நம்பத்தகுந்த மற்றும் அழுத்தமான சூழ்நிலைகள் அவசியம். மேலே சொல்லப்பட்ட தீர்ப்புகளில் இந்த முக்கிய கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன அதாவது, குற்றஞ்சாட்டப்பட்டவர் விசாரணைக்குத் தயாராக உள்ளாரா? அவருக்கு ஆதரவாக வழங்கப்பட்டுள்ள தன்விருப்புரிமையை தவறாகப் பயன்படுட்தி சாட்சியங்களை மாற்றியுள்ளாரா? என்பதாகும்....."

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

11. இந்த வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர் குற்றம் செய்துள்ளாரா அல்லது இல்லையா? அல்லது ச.வி.ந.த.ச., பிரிவு 43-டி (5)-இன் படி அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா? ஆகியவற்றிற்கான சாத்தியக்கூறை உயர்நீதிமன்றம் தீர்மானிக்கிறது என்பது உண்மை. மாறாக, மிக நீண்ட கால சிறைவாசம் மற்றும் எதிர்காலத்தில் எந்த நேரத்தில் விசாரணை முடிவுறும் என்பது தெரியவில்லை என்பதால் பிணை வழங்க தனது அதிகாரத்தை உயர்நீதிமன்றம் செயல்படுத்தியாகத் தெரிகிறது. ச.வி.ந.த.ச., பிரிவு 43-டி (5)-இல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டபூர்வ தடைகளைப்

பாராது, அரசியலமைப்பு சட்டத்தின் வகுமுறைக்கூறு 21-இல் காணக்கூடியவற்றை உயர்நீதிமன்றம் காரணங்களாகக் கருதுகிறது.

12. அத்தகைய வழக்குகளை முடிவு செய்வதில் ஏற்படும் கடுமையான பின்னடைவு அரசியலமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 21-இல் வேண்டுதலை நியாயப்படுத்தும் என்றும், அதை தொடர்ந்து விசாரணைக் கைதியை பிணையில் விடுவிக்க அவசியமாகிறது என்ற வகுத்துரையுடன் **மேற்படி ஷாஹீன் வெல்ஃபேர் அஸோஸியேஷன்** என்ற வழக்கு உட்பட இந்நீதிமன்றத்தின் பல்வேறு தீர்முடிவுகளின் தொகுப்பிலிருந்து உயர்நீதிமன்றம் அதன் கருத்தை அளித்துள்ளது. அந்த வழக்கிலிருந்து பின்வரும் கருத்துக்களைக் குறிப்பிடுவது பயனளிக்கும்:

> "10. குற்றத்தின் தன்மையையும், சமூகம், தேசத்தைக் காக்க வேண்டிய அவசியத்தை மனதில் கொண்டு, பிணை வழங்குவதில் பிரிவு 20 (8)-இல் தடா சட்டம் கடுமையான வகையங்களை வகுத்துள்ளது. **தேவையற்ற தாமதமின்றி குற்றஞ்சாட்டப்பட்டவரின் விசாரணை நாடாகும் என்ற அனுமானத்தின்பேரில் கர்தார் சிங் [(1994) 3 எஸ்சிசி 569 : 1994 எஸ்சிசி (குற்றவியல்) 899] என்ற வழக்கில், முடிவு செய்யப்பட்டவர் குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டு அத்தகைய கடுமையான வகையங்கள் நியாயப்படுத்தப்படுகின்றன. விசாரணைக் கைதிகள் கட்டாயமாக சிறையில் இருக்கும்போது, வகுமுறைக்கூறு 21-ஐ நியாயப்படுத்த தேவையான ஆழ்நிலை ஏற்படுத்துவதால், வழக்குகள் முடிவு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தை எவரும் நியாயப்படுத்த முடியாது.**"
>
> (வலியுறுத்திக் கூறப்பட்டது)

13. பிணை வழங்குவதற்கு மிக கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ள தீவிரவாத மற்றும் பிளவுபடுத்தும் செயல்பாடுகள் (தடை) சட்டம் 1987 அல்லது போதைப் பொருள்கள் மற்றும் மயக்கமூட்டும் பொருட்கள் சட்டம் 1985 ("என்டிபிஎஸ்") போன்ற சிறப்புச் சட்டங்களில் கூட, இந்த நீதிமன்றம் **பரம்ஜித் சிங் -எதிர்- மாநிலம் (என்சிடி டெல்லி), (1999) 9 எஸ்சிசி 252, பப்பா என்கிற ஷங்கர் ரகுமான் ரோஹிடா -எதிர்- மகாராஷ்டிரா மாநில அரசு,** (2005) **11 எஸ்சிசி 569 மற்றும் உமர்மியா என்கிற மமுமியா -எதிர்- குஜராத் மாநில அரசு,** (2017) **2 எஸ்சிசி** 731 என்ற வழக்குகளில் விசாரணையை விரைந்து முடிக்க குறைந்த வாய்ப்பே உள்ளதால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நீண்ட காலம் சிறையில் இருக்கும்போது அவர்களை பிணையில் விடுவித்து, அத்தகைய சிறப்புச் சட்டங்களில் பிணைக்கான நிபந்தனைகளின் அரசமைப்பு செல்லுந்தன்மையானது, அப்பாவி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் விரைந்து விசாரணையை மேற்கொள்வதற்காகவும் வழிகாட்டு நெறிமுறையாக நியாயப்படுத்தப்பட்டுள்ளது.

14. **அங்கேலா ஹரிஷ் சொண்டக்கே -எதிர்- மகாராஷ்டிரா மாநில அரசு, (சி.அ. ம. (குற்றவியல்) எண்.6888/2015, உத்தரவு நாள்** 04.05.2016) என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழே அதே சூழ்நிலையில் அமைந்துள்ள குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவித்த உத்தரவுகளை நாங்கள் மேலும் குறிப்பிடுகிறோம். அது சட்டவிரோத சட்ட நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 10, 13, 17, 18, 18 ஏ, 18 பி, 20, 21, 38, 39 மற்றும் 40(2)-ன் கீழான வழக்காகும். குற்றச்சாட்டுக்களின் கடுமைகள் மற்றும் சிறைவாசம் அனுபவித்த காலத்திற்கும் இடையே நடுவு நிலைமை பெறவும், விசாரணை

முடிவுறக்கூடிய காலக்கெடுவை எதிர்பார்த்து ஐந்தாண்டு சிறைவாசம் மற்றும் விசாரிக்கப்படவேண்டிய 200-க்கும் மேற்பட்ட சாட்சிகளையும் கருத்தில் கொண்டு, இந்த நீதிமன்றம் நியாயமான முயற்சியை மேற்கொண்டு, சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் பிரிவு 43-டி (5) இருந்தபோதிலும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்கப்பட்டது. அதே போல், **சாகர் தட்யராம் கோர்கே -எதிர்- மஹாராஷ்ட்ரா மாநில அரசு, (சி.அ. ம. (குற்றவியல்) எண்.7947/2015, உத்தரவு நாள்** 03.01.2017) என்ற வழக்கின் உத்தரவில் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர் 4 ஆண்டுகள் சிறையில் இருந்ததாலும் மற்றும் 147 சாட்சிகள் இன்னும் விசாரிக்கப்படாமல் இருந்ததாலும் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

15. மேலே சுட்டிக்காட்டப்பட்ட இரு நிகழ்வுகளைவிட இந்த வழக்கின் சங்கதிகள் மிகவும் அதிர்ச்சியை உண்டாக்குகிறது. எதிர்மேல்முறையீட்டாளர் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்தார் என்பது மட்டுமல்லாமல், 276 சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டியுள்ளது. குற்றச்சாட்டுக்கள் 27.11.2020 அன்று வனையப்பட்டது. மேலும் முடிவற்ற சாட்சிகளின் பட்டியலை வெளியிட எந்த ஆர்வமும் காட்டாது மேல்முறையீட்டாளர் தே.பு,மு-க்கு இரு வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. தண்டனை வழங்கப்பட்ட 13 உடன் குற்றவாளிகளுள் 8 ஆண்டுகளுக்கு மேலாக கடுஞ்சிறை தண்டனை எவருக்கும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர் குற்றம் செய்தவர் எனக் காட்டப்பட்டாலும், அதே வரம்புக்குட்பட்டுதான் எதிர்மேல்முறையீட்டாளர் தண்டனை பெற்றிருக்கக்கூடும் என்பது சட்ட ரீதியாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. அத்தகைய மூன்றில் இரண்டு பங்கு சிறைவாசம் ஏற்கனவே முடிந்த நிலையில், நீதியிலிருந்து வழுவிய அவரின் செயல்களுக்கு

எதிர்மேல்முறையீட்டாளர் ஏற்கனவே அதிகமாக அனுபவித்துள்ளார் எனத் தோன்றுகிறது.

16. அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி III-இல் அளிக்கப்பட்டுள்ள சுதந்திரம் முறையான நடைமுறை மற்றும் நடுநிலையின் மட்டுமின்றி நீதி மற்றும் விரைவான விசாரணை அணுகுமுறை மூலம் அதன் பாதுகாப்பை வரம்பிற்குள் உள்ளடக்கும் என இந்நீதிமன்றம் பல்வேறு தீர்ப்புகளில் தெளிவுபடுத்தியுள்ளது. **விசாரணை கைதிகள் சார்பாக உச்சநீதிமன்ற சட்ட உதவிக்குழு -எதிர்- இந்திய ஒன்றியம் (1994) 6 எஸ்சிசி 731,** 15 என்ற வழக்கில், விசாரணை நிலுவையில் இருப்பதால், விசாரணைக் கைதிகளை காலவரம்பின்றி சிறையில் வைத்திருக்க முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு நபரின் செயல் நடுவர் முன்பு நிரூபிக்கப்படாதவரை, அவரது செயல்களின் எதிர்மறையான விளைவுகளினால் எவரும் பாதிக்கப்படமாட்டார்கள். எனினும், செயல் திறனுடைய விசாரணையை பெறுவதான அன்றாட வாழ்வின் பொறுப்பினாலும், நீண்ட கால நிலுவையிலுள்ள விசாரணையினால் மறைந்துள்ள குற்றவாளியால் சமுதாயத்திற்கு ஏற்படும் ஆபத்தை சீர் செய்வதற்குள் விசாரணை நிலுவையில் உள்ளபோது, அந்நபர் விடுவிக்கப்பட வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிக்கும் கடமை நீதிமன்றங்களுக்கு உள்ளது. உரியகால விசாரணை நடக்க வாய்ப்பில்லாதபோதும், குற்றஞ்சாட்டப்பட்டவர் குறிப்பிடப்பட்ட காலத்தில் சிறைவாசம் அனுபவித்திருந்தாலும், பொதுவாக நீதிமன்றங்கள் அவர்களை பிணையில் விடுவிக்க கடமைப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

17. கூடுதல் அரசு வழக்குரைஞர், **மேற்படி. நேஷனல் இன்வெஸ்டிகேஷன் ஏஜென்சி -எதிர்- சாஹர்ர் அஹ்மத் ஷா வாட்டலி** என்ற தீர்ப்பைப் பொறுத்தவரையில்,

அது முற்றிலும் வேறு உண்மைகள் கருப்பொருளைக் கொண்டுள்ளது என நாங்கள் காண்கிறோம். அந்த வழக்கில், தண்டனைத் தீர்ப்பு அளிப்பதற்கான முகாந்திரம் உள்ளதென்றும், ஆகவே உடனிணைந்த பிணை மறுக்கப்படவேண்டும் என்ற சிறப்பு நீதிமன்றத்தின் தீர்முடிவை மாற்றியமைத்து உயர்நீதிமன்றம் பதிவிலுள்ள முழு சான்றையும் மீண்டும் பரிசீலத்தது. உயர்நீதிமன்றம் ஒரு மெய்யான குறு விசாரணையை நடத்தி, பிணை மனுவில் வரையறையை நீட்டிக்கும் சில சாட்சியங்களின் ஏற்பை முடிவு செய்தது. அது பிரிவு 43-டி (5)-இன் கீழான வழக்கு முகாந்திரத்தின் மதிப்பீட்டின் சட்டப்பூர்வ வலியுறுத்தலை தாண்டி உள்ளது மட்டுமல்லாது, அது முன்முதிர்வு மற்றும் விசாரணை பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகும். இந்த சூழ்நிலைகளில்தான், இந்த நீதிமன்றம் தலையிட்டு பிணையை ரத்து செய்தது.

18. எனவே, சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்டம், பிரிவு 43-டி (5) போன்று இருக்கும் சட்டப்பூர்வ தடைகள், அரசியலமைப்பு பகுதி III-ஐ மீறிய காரணத்தால் பிணை வழங்க அரசியலமைப்பு நீதிமன்றங்களின் தகுதியை நீக்காது என்பது தெளிவாகிறது. உண்மையில், சட்டத்தின் கீழ் உள்ள தடைகளும், அரசியலமைப்பு அதிகாரவரம்பில் செயல்படுத்தும் அதிகாரங்கள் ஆகிய இரண்டுமே நன்றாக ஒத்து அமைந்துள்ளது. நடவடிக்கைகள் துவங்கும்போது, பிணை வழங்குவதற்கு எதிரான சட்ட கோட்பாட்டை மதிப்பிடும்படி நீதிமன்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. நியாயமான கால வரம்பிற்குள் விசாரணை முடிய இயலாதபோதும், நிர்ணயிக்கப்படும் தண்டனைக்காலத்தில் பெரும்பகுதியை ஏற்கனவே சிறைவாச காலத்தைக் கழித்திருந்தாலும், அத்தகைய வகையங்களின் கடுமை தளர்ந்து விடும். ச.வி.ந.த.ச., பிரிவு 43-டி (5) போன்ற வகைக்கூறுகள் பிணை வழங்க மறுக்கப்பட

ஒரே ஒருதலை சார்பாக அல்லது விரைந்து விசாரணையை முடிப்பதற்கான அரசியலமைப்பு உரிமையை முழுதும் மீறுவதற்காக பயன்படுத்தப்படுமேயானால், அதற்கு எதிராக அத்தகைய அணுகுமுறை பாதுகாக்கும்.

19. கைவசம் உள்ள வழக்கைப் பொறுத்தவரை எதிர்மேல்முறையீட்டாளருக்கெதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் கடுமையானவை மற்றும் சமூக நல்லிணக்கத்துக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியவை என்ற சங்கதியை நாங்கள் மனதில் கொள்கிறோம். ஆரம்ப நிலையில் இந்த வழக்கு இருக்குமேயானால், நாங்கள் எதிர்மேல்முறையீட்டாளரின் வேண்டுரையை நிச்சயமாக மறுத்திருப்போம். இருப்பினும், அவர், சிறைக்காப்பில் கழித்த நீண்ட காலத்தின் மனதில் வைத்தும், எந்த நேரத்திலும் உடன் விசாரணை முடிவுறும் வாய்ப்பு இல்லாமையால், உயர்நீதிமன்றத்திற்கு பிணை வழங்குவதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை என்றே தோன்றுகிறது. அவரது விருப்பப்படி சாட்சியங்களை எடுத்துச் செல்லும் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி குற்றச்சாட்டுக்களை நிலைநிறுத்தும் மேல்முறையீட்டாளரின் உரிமை மற்றும் அதே நேரத்தில் அரசியலமைப்பு பகுதி III-இல் உறுதி செய்யப்பட்ட எதிர்மேல்முறையீட்டாளரின் நன்கு பாதுகாக்கப்பட வேண்டிய உரிமைகளிடையே சமநிலை அடைய ஒரு முயற்சி செய்யப்பட்டுள்ளது.

20. எதிர்மேல்முறையீட்டாளரை பிணையில் விட எங்களை தூண்டும் மற்றொரு காரணம் யாதெனில், சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்டம் பிரிவு 43-டி (5) ஆனது போதைப் பொருள்கள் மற்றும் மயக்கமூட்டும் பொருட்கள் சட்டம், பிரிவு 37-ஐ விட சிறிது கடுமை குறைவானது என்பதாகும். முதல் நோக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றம் புரியவில்லை என்றும், பிணையில் விடப்பட்டால் அவர் வேறொரு குற்றம்

புரியமாட்டார் என்றும், உரிய நீதிமன்றம் திருப்தியடைய வேண்டும் என்றும், போதைப் பொருள்கள் மற்றும் மயக்கமூட்டும் பொருட்கள் சட்டம் சொல்வது போன்று, சட்டவிரோத நடவடிக்கை தடை சட்டத்தில் அத்தகைய முன் நிபந்தனை ஏதும் இல்லை என்பதாகும். மாறாக, சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், பிரிவு 43-டி (5) ஆனது நன்கு அறுதியிடப்பட்ட பரிசீலனைகளான குற்றத்தின் கடுமை; சாட்சியங்களை கலைக்கக் கூடிய சாத்தியக்கூறு, சாட்சிகளிடம் செல்வாக்கு செய்தல், விசாரணைக்கு வராமல் விசாரணையை தவிர்க்கும் வாய்ப்பு போன்றவற்றுடன் சேர்த்து உரிய நீதிமன்றம் பிணை வழங்க மறுப்பதற்கான மற்றொரு காரணத்தையும் அளிக்கிறது.

முடிவு

21. மேற்சொன்ன விவாதங்களின்படி, எதிர்ப்புக்குள்ளான உத்தரவில் தலையிட நாங்கள் விரும்பவில்லை. இருப்பினும், எதிர்மேல்முறையீட்டாளரை விடுவிக்கும்போது, விசாரணை நீதிமன்றத்தால் விதிக்கப்படும் நிபந்தனைகளை தவிர, உள்ளூர் காவல் நிலையத்தில் ஒவ்வொரு வார திங்கட்கிழமை காலை 10 மணிக்கு எதிர்மேல்முறையீட்டாளர் முன்னிலையாக வேண்டும் மற்றும் அவர் எந்த பிற புதிய குற்றத்தில் ஈடுபடவில்லை என்பதை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும் என்ற கூடுதல் நிபந்தனைகளை விதிப்பு நீதியின் பயனை நிறைவேற்றும் மற்றும் சமூகத்திற்கு பெரும் அளவு நன்மை பயக்கும் என்றும் நாங்கள் உணர்கிறோம். சமூக உணர்ச்சிகளை தூண்டக்கூடிய எந்த செயல்களில் ஈடுபடுவதை எதிர்மேல்முறையீட்டாளர் தவிர்க்க வேண்டும். ஒருவேளை அவரது பிணை நிபந்தனைகளை மீறயது காணப்பட்டாலோ அல்லது சாட்சியங்களில் கலைக்க முயற்சித்தாலோ, சாட்சிகளிடம் செல்வாக்கு காட்டினாலோ அல்லது எவ்விதத்திலும் விசாரணையைப் பாதித்தாலோ அவரது பிணை

ரத்து செய்ய சிறப்பு நீதிமன்றத்திற்கு சுதந்திரம் உண்டு. அவ்வாறாக, மேலே கூறப்பட்ட உத்தரவின்படி மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்ற தீர்ப்புரையை நிறைவேற்றறலுக்கும் செயற்படுத்துதலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".